# புதிய குரல்

PUTHIYA KURAL

கனடா வாழ் தமிழருக்கான தமிழ்ப் பத்திரிகை · Est. 2023

ஞாயிறு · ஆகஸ்ட் 9, 2026 | சஞ்சிகை · தொகுதி 01 | PUTHIYAKURAL.CA


முதற் செய்தி · கனடா

# காட்டுத்தீ காரணமாக British Colombia மாகாணத்தில் அவசர நிலை

வேகமாகப் பரவி வரும் காட்டுத்தீ காரணமாக மாகாண அரசாங்கம் அவசர நிலையை அறிவித்துள்ளது. வெளியேற்றப்பட்டவர்களுக்கும் தீயை எதிர்த்துப் போராடுபவர்களுக்கும் பிரதமர் Mark Carney ஆதரவு தெரிவித்தார்.


04 செண்டினரி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு 82 மில்லியன் டொலர்

07 தலையங்கம் — இரண்டு தமிழர் திருவிழாக்கள்… ஒன்றுபடுவார்களா டொராண்டோத் தமிழர்கள்?

09 எமது காணி இராணுவத்தின் சரணாலயமா? — பலாலியில் 8ஆவது வார போராட்டம்

11 இலங்கைச் சிறைச்சாலைகளில் தொடரும் வன்முறை: 40,000 ஐ நெருங்கும் கைதிகள்

இதழ் 01 · ஆகஸ்ட 2026

# பொருளடக்கம்

## கனடா

03 **காட்டுத்தீ காரணமாக British Colombia மாகாணத்தில் அவசர நிலை**
மாகாண அரசாங்கம் அவசர நிலையை அறிவித்தது; மத்திய அரசு உதவ தயார்

04 **சென்டினரி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் விரிவாக்கம்**
82 மில்லியன் டொலர் ஒதுக்கீடு · 36,000 சதுர அடி விரிவாக்கம் · 400 வேலைவாய்ப்புகள்

05 **‘பள்ளிச் சிறுவர்களின் சண்டை’ போன்று நீடிக்கும் மோதலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்**
கனடா–அமெரிக்க உறவு குறித்து National Post இல் வெளியான கருத்துக் கடிதம்

06 **வேட்பாளர் சர்மினா நசீரின் பிரச்சாரக்குழு நடத்திய நிதிசேர் நிகழ்வு**
ஸ்காபுறோ தென்மேற்கு – 20ம் வட்டாரம் · நகரசபைத் தேர்தல்

## ஆசிரியர் தலையங்கம்

07 **இரண்டு தமிழர் திருவிழாக்கள்... ஒன்றுபடுவார்களா டொராண்டோத் தமிழர்கள்?**
“விழாக்கள் இரண்டானாலும்... தமிழர் இதயம் ஒன்றாக இருக்குமா?”

## ஈழத்து செய்திகள்

09 **எமது காணி இராணுவத்தின் சரணாலயமா?**
வலிகாமம் வடக்கு – பலாலி: மீள்குடியேற்றம் கோரி 8ஆவது வாரப் போராட்டம்

10 **பௌத்த பேரினவாதத்தின் கைகளில் தவழும் வரை தமிழர்களுக்கு நீதி கிட்டப் போவதில்லை**
அரசியல் கைதிகள் தொடர்பில் அருட்தந்தை மா. சத்திவேலின் ஊடக அறிக்கை

11 **சிறைச்சாலை சம்பவங்களும் அதன் பின்னணியும் · செம்மணி அகழ்வு**
கைதிகள் எண்ணிக்கை 40,000 ஐ நெருங்குகிறது · தலை இல்லாத எலும்புக்கூடு மீட்பு

## டிரெண்டிங் @ புதிய குரல்

12 **இருக்கைக்கு மேல் வைக்கப்படும் பைகளுக்குக் கட்டணம்**
ஜெட்ஸ்டார் அறிவிப்பு · 2027 பெப்ரவரி முதல் அமல்

**புதிய குரல் · PUTHIYA KURAL**

**வெளியீடு:** Puthiya Kural Newspaper Publications
Suite 2000, #1225 Kennedy Road,
Scarborough, Ontario, Canada M1P 4Y1

**தொடர்புகளுக்கு:** Tel/Fax (437) 886-9767
info@puthiyakural.ca · puthiyakural.ca
facebook / instagram / youtube: @puthiyakuralca

இச்சஞ்சிகையில் இடம்பெறும் செய்திகள் அனைத்தும் புதிய குரல் இணையத்தளத்தில் (puthiyakural.ca) ஆகஸ்ட் 8–9, 2026 அன்று வெளியான முன்பக்கச் செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்டவை. © 2026 Puthiya Kural.

கனடா செய்திகள் · அவசர நிலை

# காட்டுத்தீ காரணமாக British Colombia மாகாணத்தில் அவசர நிலை

வேகமாகப் பரவி வரும் காட்டுத்தீ காரணமாக மாகாண அரசாங்கம் அவசர நிலையை அறிவித்துள்ளது; நிலைமை மோசமடைந்து வருவதாக முதல்வர் David Eby தெரிவித்தார்.

ஆசிரியர் குழு · ஆகஸ்ட் 9, 2026

> காட்டுத்தீ காரணமாக British Colombia மாகாணம் அவசர நிலையை அறிவித்தது.

வேகமாகப் பரவி வரும் காட்டுத்தீ காரணமாக British Colombia மாகாண அரசாங்கம் அவசர நிலையை அறிவித்துள்ளது.

சனிக்கிழமை (08) மதியம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், நிலைமை மோசமடைந்து வருவதாக முதல்வர் David Eby கூறினார்.

> **“நிலைமை மோசமடைந்து வருகிறது” — முதல்வர் David Eby**
>
> புதிய குரல்

இந்த நிலையில் காட்டுத்தீயினால் வெளியேற்றப்பட்டவர்களுக்கும் காட்டுத்தீயை எதிர்த்துப் போராடுபவர்களுக்கும் தனது ஆதரவை கனடியப் பிரதமர் Mark Carney தெரிவித்தார்.

வேகமாகப் பரவி வரும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும், ஆபத்தில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளில் உதவ மத்திய அரசு தயாராக இருக்கும் எனவும் அவர் கூறினார்.

**சுருக்கமாக**

- British Colombia மாகாணத்தில் அவசர நிலை அறிவிப்பு
- சனிக்கிழமை (ஆகஸ்ட் 08) செய்தியாளர் சந்திப்பில் அறிவிப்பு
- முதல்வர்: David Eby · பிரதமர்: Mark Carney
- வெளியேற்ற நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உதவ தயார்

புதிய குரல் · சேவைகள்

**E-Paper · வானொலி · இலவசச் செயலிகள்**

கனடா வாழ் தமிழருக்கான செய்திகளை puthiyakural.ca இணையத்தளத்தில் E-Paper ஆகவும், சமூக வானொலியை நேரலையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

“PuthiyaKural TamilNews & Radio” செயலியை App Store மற்றும் Google Play இல் இலவசமாகப் பதிவிறக்கம் செய்யலாம். தொடர்புகளுக்கு: (437) 886-9767 · info@puthiyakural.ca

கனடா செய்திகள் · சுகாதாரம்

# சென்டினரி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் விரிவாக்கத்திற்காக 82 மில்லியன் டொலர்

ஸ்காபரோ சுகாதார வலையமைப்பின் சென்டினரி மருத்துவமனையில் புதிய அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணிகள் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டன.

ஆசிரியர் குழு · ஆகஸ்ட் 8, 2026

கடந்த செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 4 அன்று, ஸ்காபரோ ரூஜ் பார்க் சட்டமன்ற உறுப்பினரும் சுகாதார இணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள், துணை முதல்வரும் சுகாதார அமைச்சருமான சில்வியா ஜோன்ஸ் மற்றும் ஸ்காபரோ சட்டமன்ற உறுப்பினர்கள் ரேமண்ட் சோ, டேவிட் ஸ்மித் ஆகியோருடன் இணைந்து, ஸ்காபரோ சுகாதார வலையமைப்பின் சென்டினரி மருத்துவமனையில் புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணிகளை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

ஒன்ராறியோ அரசின் 82 மில்லியன் டொலருக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டின் ஆதரவுடன் அமைக்கப்படும் இந்த புதிய அவசர சிகிச்சைப் பிரிவு, தற்போதைய அவசர சிகிச்சைப் பிரிவை விட 36,000 சதுர அடிக்கும் அதிகமான அளவிற்கு விரிவுபடுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் வேகமாக வளர்ந்து வரும் ஸ்காபரோ மக்கள் தொகைக்கு விரைவானதும் வசதிகள் நிறைந்ததுமான உயர்தர அவசர மருத்துவ சேவைகளை அவர்களின் வீட்டிற்கு அருகிலேயே வழங்குவதற்கான திறன் அதிகரிக்கப்படுவதுடன், இப்பகுதியில் சுமார் 400 நல்ல ஊதியமுள்ள வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும் வாய்ப்பும் உருவாகின்றது.

### எண்களில்

- 82 மில்லியன் டொலருக்கும் அதிகமான ஒன்ராறியோ அரச நிதி
- 36,000 சதுர அடிக்கும் அதிகமான விரிவாக்கம்
- சுமார் 400 நல்ல ஊதியமுள்ள வேலைவாய்ப்புகள்
- கட்டுமானம் ஆரம்பம்: ஆகஸ்ட் 4, 2026

> **“குடும்பங்கள் தேவையான நேரத்தில், வீட்டிற்கு அருகிலேயே உயர்தர சிகிச்சையைப் பெற உதவும்”**
>
> புதிய குரல்

“ஸ்காபரோ பிரதேசமானது தொடர்ந்து வளர்ந்து வரும் நிலையில், எமது சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப சுகாதார சேவைகளையும் உட்கட்டமைப்பையும் விரிவுபடுத்துவது மிகவும் முக்கியமானது. சென்டினரி மருத்துவமனையின் இந்த புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு, குடும்பங்கள் அவர்களுக்கு தேவையான நேரத்தில், வீட்டிற்கு அருகிலேயே விரைவான மற்றும் உயர்தர சிகிச்சையைப் பெற உதவும். ஸ்காபரோ மக்களுக்காக இந்த முக்கியமான முதலீட்டை முன்னெடுப்பதில் நான் பெருமையடைகிறேன்,” என சுகாதார இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்தார்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க விரிவாக்கத்தின் மூலம், ஸ்காபரோ குடும்பங்களுக்கு தலைமுறைகள் கடந்தும் தேவையான உயர்தர மருத்துவ சேவைகளை அவர்களின் சமூகத்திற்கு அருகிலேயே வழங்கும் வலுவான மற்றும் நவீன சுகாதார அமைப்பை உருவாக்குவதில் ஒன்ராறியோ அரசு தொடர்ந்து முன்னேறி வருகிறது என்றும் அங்கு உரையாற்றிய அனைவரும் தெரிவித்தனர்.

கனடா செய்திகள் · சர்வதேசம்

# ‘பள்ளிச் சிறுவர்களின் சண்டை’ போன்று நீடிக்கும் மோதலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்

கனடா–அமெரிக்க உறவில் தொடரும் மோதல் போக்கை விமர்சிக்கும் கருத்துக் கடிதம் National Post பத்திரிகையின் “Letters” பகுதியில் வெளியாகியுள்ளது.

ஆசிரியர் குழு · ஆகஸ்ட் 9, 2026

> கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே, குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அணுகுமுறையைச் சுற்றி நீடித்து வரும் அரசியல் மற்றும் வர்த்தகப் பதற்றங்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனக் கோரும் கருத்து National Post பத்திரிகையின் “Letters” பகுதியில் வெளியாகியுள்ளது.

“Let’s end this schoolyard fight with Trump” என்ற தலைப்பில் வெளியான இந்தக் கருத்துக் கடிதம், கனடா–அமெரிக்க உறவில் தொடர்ந்து இடம்பெறும் மோதல் போக்கை விமர்சிக்கும் வகையில் அமைந்துள்ளது.

கனடாவும் அமெரிக்காவும் நீண்டகாலமாக நெருங்கிய பொருளாதார மற்றும் அரசியல் உறவைக் கொண்ட நாடுகளாக இருந்து வருகின்றன. எனினும், ட்ரம்பின் அரசியல் அணுகுமுறைகள் மற்றும் கனடா தொடர்பான அவரது கடுமையான கருத்துக்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் புதிய பதற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

## மோதலைத் தாண்டி, பேச்சுவார்த்தை மற்றும் நடைமுறை அணுகுமுறையே தீர்வு

புதிய குரல்

கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக மாற்றுவது குறித்த ட்ரம்பின் கருத்துக்கள், வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார அழுத்தங்கள் ஆகியவை கனடாவில் பரவலான அரசியல் விவாதத்துக்கு வழிவகுத்துள்ளன. இதனை ஒரு “பள்ளி மாணவர்களின் சண்டை” போன்று நீடிக்க விடாமல், இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மற்றும் நடைமுறை அணுகுமுறையின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே இந்தக் கருத்தின் மையப்புள்ளியாகக் காணப்படுகிறது.

கனடா–அமெரிக்க உறவு இரு நாடுகளின் பொருளாதாரத்துக்கும் முக்கியமானதாக இருப்பதால், தொடர்ச்சியான மோதல் இரு தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக வர்த்தகம், எல்லைப் பாதுகாப்பு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பு போன்ற துறைகளில் நிலையான உறவு அவசியமாகிறது.

இந்த நிலையில், அரசியல் தலைவர்கள் தனிப்பட்ட விமர்சனங்கள் மற்றும் பரஸ்பர குற்றச்சாட்டுகளைத் தாண்டி, இரு நாடுகளின் நீண்டகால நலனை முன்னிறுத்தி செயல்பட வேண்டும் என்ற கருத்து மீண்டும் முன்வைக்கப்படுகிறது.

கனடா தமிழர் செய்திகள் · தேர்தல்

# வேட்பாளர் சர்மினா நசீரின் பிரச்சாரக்குழு நடத்திய நிதிசேர் நிகழ்வு

றொறன்ரோ நகரசபைத் தேர்தலில் ஸ்காபுறோ தென்மேற்கு – 20ம் வட்டாரத்திற்கான வேட்பாளராகப் போட்டியிடும் சர்மினா நசீரின் நிதிசேர் நிகழ்வு ஸ்காபுறோவில் நடைபெற்றது.

ஆசிரியர் குழு · ஆகஸ்ட் 8, 2026

> மிக விரைவில் நடைபெறவுள்ள றொறன்ரோ நகரசபைக்கான தேர்தலில் — ஸ்காபுறோ தென்மேற்கு 20ம் வட்டாரத்திற்கான வேட்பாளராகப் போட்டியிடும் திருமதி சர்மினா நசீரின் பிரச்சாரக்குழு நடத்திய நிதிசேர் நிகழ்வு கடந்த 31-07-2026 வெள்ளிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் நடைபெற்றது.

பல்வேறு இனங்கள் சார்ந்த வெவ்வேறு மொழிகள் பேசுவோர்களாக சுமார் 100 பார்வையாளர்களும் நன்கொடையாளர்களும் அங்கு கலந்து கொண்டார்கள். அங்கு தமிழ் பேசும் அன்பர்களான சமூக சேவையாளர் விசு கணபதிப்பிள்ளை, ‘யுகம்’ வானொலி கணபதி ரவீந்திரன், நகைக் கடை உரிமையாளர் சபாரத்தினம், ‘உதயன்’ லோகேந்திரலிங்கம் உட்பட சில தமிழ் பேசும் அன்பர்களும் கனடிய மற்றும் பங்களாதேஷ் – பாகிஸ்தான் ஆகிய இனக்குழுக்களைச் சேர்ந்தவர்களும் சபையை அலங்கரித்தார்கள்.

வெவ்வேறு சமூகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சிலர் அங்கு உரைகளை ஆற்றினார்கள்.

> **“மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணமே எனது அரசியல் பயணத்தின் ஆரம்பம்”**
>
> புதிய குரல்

நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் சர்மினா நசீரின் (Sharmina Nasrin) அங்கு உரையாற்றுகையில், தனது சமூகம் சார்ந்த மற்றும் குடும்பம் சார்ந்த சில சவால்களைத் தான் எதிர்கொண்ட நாட்களில் அவற்றிற்கான தீர்வைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தோடுதான் அரசியலில் ஈடுபட வேண்டும் என்றும், தேர்தல்களில் போட்டியிடுவதன் மூலம் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்று எண்ணி முதலில் சில சமூகப் பணிகளில் ஈடுபடத் தொடங்கியதாகவும், அவ்வாறே தனது அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த பயணம் ஆரம்பித்ததாகவும் கூறினார்.

அன்றைய தினம் பல இளம் மாணவர்கள் வேட்பாளர் சர்மினா அவர்களின் தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபடத் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

### நிகழ்வு விவரம்

- திகதி: 31-07-2026, வெள்ளிக்கிழமை மாலை · இடம்: ஸ்காபுறோ
- வட்டாரம்: ஸ்காபுறோ தென்மேற்கு – 20
- பங்கேற்பு: சுமார் 100 பார்வையாளர்கள், நன்கொடையாளர்கள்
- வாழ்த்துக்களுக்கு: 437 228 8548

ஆசிரியர் தலையங்கம்

# இரண்டு தமிழர் திருவிழாக்கள்… ஒன்றுபடுவார்களா டொராண்டோத் தமிழர்கள்?

இரண்டு விழாக்கள் தமிழர்களை இரண்டாகப் பிரிக்குமா? அல்லது இணைந்து மேலும் பலப்படுத்துமா? இதற்கான பதில் ஏற்பாட்டாளர்களிடம் மட்டுமல்ல — ஒட்டுமொத்தச் சமூகத்திடமும் உள்ளது.

ஆசிரியர் · புதிய குரல் · ஆகஸ்ட் 8, 2026

டொராண்டோ நகரம் மீண்டும் ஒரு முறை தமிழர்களின் கலாசாரச் செழுமையை உலகிற்கு வெளிப்படுத்தத் தயாராகி வருகிறது. தமிழர்களின் மொழி, கலை, பண்பாடு, பாரம்பரியம், உணவு, இசை, நடனம் என எமது அடையாளத்தின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தும் வகையில் இரண்டு தமிழர் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இது மகிழ்ச்சிக்குரிய செய்தி. ஆனால், அதே நேரத்தில் ஒரு முக்கியமான கேள்வியையும் இந்த இரண்டு நிகழ்வுகள் நம்முன் நிறுத்துகின்றன: இரண்டு தமிழர் திருவிழாக்கள் தமிழர்களை இரண்டாகப் பிரிக்குமா? அல்லது இரு நிகழ்வுகளும் இணைந்து தமிழர்களை மேலும் பலப்படுத்துமா?

இந்தக் கேள்விக்கான பதில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் மட்டுமல்ல; ஒட்டுமொத்த டொராண்டோத் தமிழ்ச் சமூகத்திடமும் உள்ளது.

## விழாக்கள் அதிகரிப்பது பிரச்சினையல்ல

ஒரே நகரத்தில் இரண்டு தமிழர் திருவிழாக்கள் நடைபெறுவது தானாகவே ஒரு பிரச்சினை அல்ல. மாறாக, தமிழர்களின் சமூக வலிமையும் கலாசார ஆர்வமும் அதிகரித்திருப்பதற்கான அடையாளமாகவே இதைப் பார்க்க முடியும். ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் பல்வேறு அமைப்புகள், கருத்துகள், தலைமைத்துவங்கள் உருவாகுவது இயல்பானது.

> **“எங்கள் நிகழ்வே தமிழர்களின் ஒரே நிகழ்வு” என்ற மனநிலை உருவாகும்போதுதான் பிரச்சினை**
>
> புதிய குரல்

தமிழர் திருவிழா என்பது எந்த ஒரு தனிநபருக்கோ, அமைப்புக்கோ, அரசியல் அணிக்கோ சொந்தமானது அல்ல. அது ஒரு சமூகத்தின் அடையாளத்தை பிரதிபலிக்கும் பொதுவான மேடை.

## போட்டியா? கூட்டாண்மையா?

டொராண்டோவில் தமிழர்கள் பல துறைகளில் சாதித்து வருகின்றனர். கல்வி, தொழில், அரசியல், ஊடகம், கலை, விளையாட்டு, சமூக சேவை என பல்வேறு துறைகளில் தமிழர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தமிழர் திருவிழாக்களும் போட்டியின் களமாக மாற வேண்டுமா? அல்லது “நிகழ்ச்சிகள் இரண்டு என்றாலும், தமிழர் சமூகம் ஒன்று” என்ற செய்தியை உலகிற்கு வழங்க வேண்டுமா?

இரண்டு விழாக்களும் தங்களது தனித்துவத்தைத் தக்க வைத்துக்கொள்ளலாம். தனித்தனி நிகழ்ச்சிகள் நடத்தலாம். ஆனால், இரு விழாக்களும் ஒன்றுக்கொன்று எதிரானவை என்ற தோற்றத்தை உருவாக்காமல் இருப்பது மிகவும் அவசியம்.

## எமது குழந்தைகளுக்கு நாம் சொல்ல வேண்டிய செய்தி என்ன?

டொராண்டோவில் வளர்ந்து வரும் இரண்டாம் தலைமுறை தமிழ்க் குழந்தைகளை நாம் சிந்திக்க வேண்டும். அவர்கள் எம்மிடம் இருந்து தமிழை மட்டும் கற்றுக்கொள்வதில்லை — தமிழர்களாக எப்படி ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்பதையும் கற்றுக்கொள்கிறார்கள்.

தொடர்ச்சி பக்கம் 08 ▸

◂ தொடர்ச்சி · பக்கம் 07 · ஆசிரியர் தலையங்கம்

# “விழாக்கள் இரண்டானாலும்… தமிழர் இதயம் ஒன்றாக இருக்குமா?”

ஆசிரியர் · புதிய குரல்

ஒரே சமூகத்தில் இரண்டு நிகழ்ச்சிகள் நடந்தால், பெரியவர்கள் ஒருவரை ஒருவர் விமர்சிப்பதையும், ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களில் பிரிவினையை ஏற்படுத்துவதையும் அவர்கள் பார்த்தால், நாம் அவர்களுக்கு என்ன பாடம் கற்பிக்கிறோம்? தமிழ் மொழி ஒன்றுபடுத்தும் மொழி என்றா? தமிழர் பண்பாடு ஒன்றுபடுத்தும் பண்பாடு என்றா? அல்லது, சிறிய வேறுபாடுகளுக்காக நாம் ஒருவரை ஒருவர் பிரிந்து நிற்பதே எமது வழக்கம் என்றா? இந்தக் கேள்விக்கு நாம் நேர்மையாக பதிலளிக்க வேண்டும்.

## ஒரே மேடை தேவையில்லை; ஒரே நோக்கம் போதும்

தமிழர் ஒற்றுமை என்றால் எல்லோரும் ஒரே மேடையில் நிற்க வேண்டும் என்று அர்த்தமில்லை. கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அமைப்பு வேறுபாடுகள் இருக்கலாம். நிகழ்ச்சி நடத்தும் முறைகளில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தமிழர் நலன், தமிழ் மொழி, தமிழ் பண்பாடு, அடுத்த தலைமுறை மற்றும் சமூக முன்னேற்றம் ஆகியவற்றில் பொதுவான நோக்கம் இருக்க வேண்டும்.

இரண்டு விழாக்களும் ஒருவருக்கொருவர் வாழ்த்து தெரிவிக்க முடியாதா? இரண்டு அமைப்புகளும் ஒரு பொதுவான சமூக நல முயற்சியை இணைந்து முன்னெடுக்க முடியாதா? தமிழ் மாணவர்களுக்கான கல்வி உதவி, மூத்தோர் நலன், புதிய குடியேற்றவாசிகளுக்கான ஆதரவு, இளைஞர் தலைமைத்துவம் அல்லது மனிதநேயப் பணிகளில் இரு விழாக்களும் இணைந்து ஒரு பொதுத் திட்டத்தை உருவாக்க முடியாதா?

**முடியும். அதற்குத் தேவையானது பெரிய நிதி அல்ல; தேவையானது ஒரு சிறிய மனமாற்றம்.**

## ஒற்றுமை என்பது புகைப்படம் அல்ல

பல நிகழ்வுகளில் தமிழர் ஒற்றுமை பற்றி பேசுகிறோம். ஒரே மேடையில் பலர் நிற்கிறார்கள். புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. சமூக ஊடகங்களில் பகிரப்படுகின்றன. ஆனால் உண்மையான ஒற்றுமை என்பது புகைப்படத்தில் தெரிவதல்ல.

### உண்மையான ஒற்றுமை என்பது

- ஒருவரின் வெற்றியை மற்றொருவர் ஏற்றுக்கொள்வது
- ஒருவரின் நிகழ்ச்சியை மற்றொருவர் மதிப்பது
- கருத்து வேறுபாடு இருந்தாலும் சமூக நலனில் இணைந்து செயல்படுவது

## இரண்டு விழாக்கள்… ஒரு தமிழர் சமூகம்

இரண்டு தமிழர் திருவிழாக்கள் நடைபெறுவது வரலாற்றில் ஒரு பிரிவின் அடையாளமாக மாற வேண்டிய அவசியமில்லை. அவை தமிழர் சமூகத்தின் பல்வகைத் தன்மையின் அடையாளமாக மாறலாம். ஒருவர் ஒரு விழாவுக்குச் செல்லலாம்; மற்றொருவர் இன்னொரு விழாவுக்குச் செல்லலாம். ஆனால் விழாக்கள் முடிந்த பிறகு நாம் அனைவரும் ஒரே சமூகமாகவே இருக்க வேண்டும்.

ஏனெனில் விழாக்கள் சில நாட்கள் மட்டுமே. தமிழர் அடையாளம் தலைமுறைகளைத் தாண்டிச் செல்ல வேண்டியது. இன்று நாம் எடுக்கும் முடிவுகள் நாளைய தலைமுறையின் சமூக நினைவாக மாறும்.

**இரண்டு விழாக்கள் இருக்கலாம். இரண்டு மேடைகள் இருக்கலாம். ஆனால் தமிழர் சமூகம் ஒன்றாக இருக்க வேண்டும்.**

புதிய குரல்

எனவே, டொராண்டோவில் நடைபெறும் இரண்டு தமிழர் திருவிழாக்களையும் நாம் ஒரு போட்டியாக அல்லாமல், ஒரு வாய்ப்பாகப் பார்க்க வேண்டும். அதுவே எமது மொழிக்கும், பண்பாட்டுக்கும், வரலாற்றுக்கும் நாம் செலுத்தத்தக்கூடிய உண்மையான மரியாதை.

**— ஆசிரியர், புதிய குரல்**

ஈழத்து செய்திகள் · காணி உரிமை

# எமது காணி இராணுவத்தின் சரணாலயமா?

வலிகாமம் வடக்கு – பலாலி பகுதியில் மீள்குடியேற முடியாத நிலையில் உள்ள மக்கள் 8ஆவது வாரமாகவும் அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆசிரியர் குழு · ஆகஸ்ட் 9, 2026

> எங்கள் நிலங்களைச் சுரண்ட இனியும் இடமளிக்க முடியாது என்ற வலுவான கோசத்துடன், வலிகாமம் வடக்கு – பலாலி பகுதியில் மீள்குடியேற முடியாத நிலையில் உள்ள மக்கள் இன்று 8ஆவது வாரமாகவும் அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பலாலி சந்தியில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், தமது பூர்வீக நிலங்களை உடனடியாக விடுவித்து, மீள்குடியேற்றத்துக்கு அரசாங்கம் வழிவகுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்தினர்.

பல ஆண்டுகளாகத் தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேற முடியாத நிலையில் இருப்பதாகவும், காணிகள் அரச படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் வாழ்வாதாரம், குடியிருப்பு மற்றும் எதிர்கால வாழ்வு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

**போராட்டக் கோசங்கள்**

- ‘எங்கள் காணிகள் எங்களுக்கே வேண்டும்’
- ‘பூர்வீக நிலங்களில் மீள்குடியேற அனுமதிக்க வேண்டும்’
- ‘மக்களின் நிலங்களைச் சுரண்டுவதை நிறுத்த வேண்டும்’

‘எங்கள் காணிகள் எங்களுக்கே வேண்டும்’, ‘பூர்வீக நிலங்களில் மீள்குடியேற அனுமதிக்க வேண்டும்’, ‘மக்களின் நிலங்களைச் சுரண்டுவதை நிறுத்த வேண்டும்’ உள்ளிட்ட பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

## உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும், நடைமுறையில் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை

புதிய குரல்

தமது நிலங்களை விடுவிப்பதாகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினரால் உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும், நடைமுறையில் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இதனால் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஈழத்து செய்திகள் · அரசியல் கைதிகள்

# பௌத்த பேரினவாதத்தின் கைகளில் தவழும் வரை தமிழர்களுக்கு நீதி கிட்டப் போவதில்லை

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல் வெளியிட்ட ஊடக அறிக்கை.

பாலநாதன் சதீசன் · ஆகஸ்ட் 9, 2026

> தமிழர்களின் அரசியல் விடயத்தில் சட்டமும் நீதியும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கைகளில் தவழும் வரை தமிழர்களுக்கு நீதி கிட்டப் போவதில்லை என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் 30.07.2026 அன்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை” என சிங்கள பௌத்த அரசியல் நிலைப்பாட்டில் நின்று தற்போதைய அரசாங்கத்தின் நீதி அமைச்சர் அண்மையில் (22/7) நாடாளுமன்றத்தில் கூறியதோடு, அரசியல் கைதிகள் என்பதற்கான பொருள் கோடல் சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தில் இல்லை என நியாயம் கற்பித்திருப்பது தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்ந்தும் தண்டிக்கப்படும் குற்றம் என்பதை நிரூபிக்கவே அன்றி வேறொன்றுமில்லை. இந்நிலைப்பாட்டினை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளையும், அரசியல் கோரிக்கைகளையும் மதிக்காது 1972 மற்றும் 1978 அரசியல் யாப்புகள் கொண்டு வரப்பட்டதோடு, தமிழ் தேச அரசியலை அழிக்கவும், ஒட்டுமொத்த தமிழர்களையும் பயங்கரவாதிகள், தேசத்துரோகிகள் என அடையாளப்படுத்தவும் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தினைத் தொடர்ந்தும் பாதுகாத்துக் கொண்டு, சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தில் அரசியல் கைதிகள் தொடர்பாக பொருள் கோடல் இல்லை என்பது அரசியல் கேளிக்கூத்தாகும்.

> **“நாங்கள் கும்பிட வேண்டும், அவர்களின் காலடியில் விழ வேண்டும் என்பதே சிங்கள பேரினவாதத்தின் விருப்பம்”**
>
> புதிய குரல்

யுத்தத்தினை நானே முடிவுக்குக் கொண்டு வந்தேன் என மார்தட்டும் மகிந்த ராஜபக்சவின் ஆட்சி காலத்திலும், இறுதி யுத்த நாட்களில் நானே நாட்டின் தலைமைப் பொறுப்பிலிருந்தேன் எனக் கூறும் மைத்திரியின் ஆட்சிக்காலத்திலும் அரசியல் கைதிகள் சமூகமயமாக்கப்பட்டனர். அது அவர்களின் அரசியல் தேவைக்காகவே அன்றி தமிழர்களின் அரசியல் நலனுக்காக அல்ல என்பதையும் கூற விரும்புகின்றோம்.

இறுதியாக, தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வருமுன்னர் தமிழர் தாயகத்தில் தனது தேர்தல் மேடைகளில் நின்று “நாம் பதவிக்கு வந்தால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம்” என வாக்குறுதி அளித்து தமிழர்களின் வாக்குகளைக் கவர்ந்து பதவியில் அமர்ந்த பின்னர், நீதி அமைச்சர் ஊடாகத் தனது நிலைப்பாட்டினைத் தெரிவிப்பது சிங்களவர்களுக்கு அந்த நிலைப்பாட்டினை வெளிப்படுத்தவே.

அரசியல் கைதிகளாகத் தமிழர்களால் அடையாளப்படுத்தப் பட்டோரின் விடுதலைக்காக தமிழர் தாயகத்திலும், கொழும்பு நகரிலும் பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் விடுதலைக் குரல்கள் எழுப்பப்பட்டன. அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காகச் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டங்கள் செய்தும் எத்தகைய பலனும் கிட்டவில்லை.

இந்தப் பின்னணியில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்கள் “ஜனாதிபதி அனுரகுமார அவர்களிடம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கும்பிட்டுக் கேட்டு விட்டோம்; அதைவிட வேறு எவ்வாறு கேட்பது” எனப் பகிரங்கமாகக் கூறிய விடயம் தமிழர்களுக்கு வேதனை அளிக்கின்றது.

**அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான ஆக்கப்பூர்வமான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதற்கான சட்டத் திருத்தங்களைச் செய்யுங்கள் என மீண்டும் கோருகின்றோம்.**

ஈழத்து செய்திகள் · சிறைச்சாலைகள்

# சிறைச்சாலை சம்பவங்களும் அதன் பின்னணியும்

ஜூலை 5 முதல் தொடரும் வன்முறைகள்: அதிகப்படியான கைதிகள் நெருக்கடி, பாதுகாப்பு வீழ்ச்சிகள் மற்றும் ஆபத்துமிக்க கைதிகளை நிர்வகித்தல் குறித்து பாரிய கவலைகள்.

ஆசிரியர் குழு · ஆகஸ்ட் 8, 2026

> இலங்கை சிறைச்சாலைகளில் ஜூலை 5 முதல் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் வன்முறைகள் காரணமாக, அதிகப்படியான சிறைக்கைதிகள் நெருக்கடி, பாதுகாப்பு வீழ்ச்சிகள் மற்றும் ஆபத்துமிக்க கைதிகளை நிர்வகித்தல் குறித்த பாரிய கவலைகள் எழுந்துள்ளன.

தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் அதிகரித்துள்ளமை மற்றும் சிறைச்சாலைக் கலகங்கள் பரவுவதைத் தடுப்பதற்காக, பிரதான திருத்தப் பள்ளிகள் பல பலத்த பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. பொலிஸார், முப்படையினர், விசேட அதிரடிப்படை, கலகம் அடக்கும் பிரிவுகள் மற்றும் வான்வழி கண்காணிப்புப் பிரிவுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஜூலை 5 ஆம் திகதி நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கொடூரமான மோதலின் காரணமாக 10 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 32 பேர் உயிரிழந்ததை அடுத்து இந்த நெருக்கடி நிலை தீவிரமடைந்தது. இதனைத் தொடர்ந்து மஹர மற்றும் புதிய மகசின் சிறைச்சாலைகளிலும் அமைதியின்மை பதிவானது. ஆகஸ்ட் 7 ஆம் திகதி குருவிட்ட சிறைச்சாலையில் ஏற்பட்ட பாரிய மோதலில் இரண்டு கைதிகள் உயிரிழந்ததுடன் பல பேர் காயமடைந்தனர்.

**நிலவரம் · ஆகஸ்ட 5, 2026**

- மொத்தக் கைதிகள்: 39,400 (அரசு பொறுப்பேற்கும் போது 29,000)
- விசாரணைக் கைதிகள்: 28,702
- உத்தியோகத்தர் தாங்குமிடங்களுக்கு ரூ. 46 மில்லியன்
- கலகம் அடக்கும் உபகரணங்கள்: ரூ. 13.7 மில்லியன்

பல்லன்சேனை திறந்தவெளிச் சிறைச்சாலையிலும் பதற்றமான சூழ்நிலை உருவானதுடன், அங்கு பாதுகாப்புப் பணியாளர்கள் நிலைநிறுத்தப்பட்டு அமைதி நிலைநாட்டப்பட்டது. சிறை வளாகத்திற்கு வெளியில் இருந்து வீசப்பட்டதாகக் கூறப்படும் சந்தேகத்திற்கிடமான பொதியொன்று கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து அங்கு அமைதியின்மை வெடித்தது; சுமார் 40 கைதிகளுக்கிடையில் மோதல் ஏற்பட்டது.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய திட்டமிட்ட சதிவலையே சிறைச்சாலைக் கலகங்களுக்குக் காரணம் என உளவுத்துறை அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன. முக்கிய சிறைச்சாலைகளின் வெளிப் பாதுகாப்புக்காக இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்றது முதல் சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை 29,000 இலிருந்து கிட்டத்தட்ட 40,000 ஆக அதிகரித்துள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நானயக்கார தெரிவித்துள்ளார். நெரிசல் மற்றும் அதன் மூலக் காரணங்களை ஆராய்ந்து சட்ட, நிர்வாக மற்றும் கொள்கை ரீதியான சீர்திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்காக நீதி அமைச்சர் தலைமையில் உயர்மட்ட அமைச்சரவைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஈழத்து செய்திகள் · செம்மணி

## செம்மணியில் தலை இல்லாத, கைகள் கட்டப்பட்ட எலும்புக்கூடு

செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இன்று நடந்த அகழ்வின் போது கழுத்துடன் துண்டிக்கப்பட்டு, தலை (மண்டையோடு) இல்லாத நிலையில், கைகள் கட்டியவாறான மனித எலும்புக்கூட்டுத் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த எலும்புக்கூட்டுத் தொகுதியின் இரு கைகளும் கட்டியவாறு நெஞ்சோடு அணைத்த நிலையில் காணப்படுகின்றது.

டிரெண்டிங் @ புதிய குரல் · பயணம்

# இருக்கைக்கு மேல் வைக்கப்படும் பைகளுக்குக் கட்டணம்

விமானங்களில் இருக்கைக்கு மேல் வைக்கப்படும் பொருட்களுக்கு விரைவில் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது என ஜெட்ஸ்டார் (Jetstar) அறிவித்துள்ளது.

ஆசிரியர் குழு · ஆகஸ்ட் 8, 2026

> விமானங்களில் பயணிகள் இருக்கைக்கு மேல் வைக்கப்படும் பொருட்களுக்கு விரைவில் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது என ஜெட்ஸ்டார் (Jetstar) அறிவித்துள்ளது.

2027 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் இந்த நடைமுறை செயல்பாட்டுக்கு வரும். பயணிகள் இருக்கைக்குக் கீழ் ஒரு பையைக் கூடுதல் செலவின்றி வைத்துக்கொள்ளலாம். ஆனால் பெரிய பைகளுக்கு 16 டொலர் முதல் 52 டொலர் வரை பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

உலக அளவில் செயல்படும் பல்வேறு மலிவுக் கட்டண விமான நிறுவனங்கள் ஏற்கனவே இத்தகைய நடைமுறையைப் பின்பற்றுகின்றன. மலிவுக் கட்டண விமான நிறுவனங்களின் வருவாயில் பெட்டிகளுக்கான கட்டணம் மற்றும் இருக்கை தேர்வுக்கான கட்டணம் ஆகியவை பெரும் பங்கு வகிக்கின்றன.

புதிய நடைமுறையானது விமானம் திட்டமிட்ட நேரத்தில் புறப்பட உதவும் என்று ஜெட்ஸ்டார் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டெஃபனி டுல்லி (Stephanie Tully) தெரிவித்தார்.


# புதிய குரல்

PUTHIYA KURAL

Canada Tamil News · Community Radio Live · Free Apps · Est. 2023

**தொடர்புகளுக்கு**

Tel/Fax (437) 886-9767
info@puthiyakural.ca
Suite 2000, #1225 Kennedy Road, Scarborough, ON, Canada M1P 4Y1

**எம்மைத் தொடருங்கள்**

puthiyakural.ca
facebook.com/PuthiyaKuralCA
instagram.com/puthiyakuralca
youtube.com/@puthiyakuralca

**செயலிகள்**

App Store மற்றும் Google Play இல் “PuthiyaKural TamilNews & Radio” இலவசமாகப் பதிவிறக்கம் செய்யலாம்.
E-Paper · Radio · Awards